

திருப்பூர் வடக்கு மாவட்ட மாநகர கழகத்தின் சார்பில் பாண்டியன் நகர் பகுதி, 16வது வார்டு, மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் ஈ.தங்கராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சாவல் பூண்டி சுந்தரேசன், குடியாத்தம் அன்பு ஆகியோர் உரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### குளித்தலையில் ஒன்றிய அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

# ஒரு ரூபாய்க்கு 29 பைசா நிதியை ஒன்றிய அரசு கொடுத்தால் என்ன?

## அமைச்சர் செந்தில் பாலாஜி கேள்வி!

கரூர், மார்ச் 16-

ஒரு ரூபாய்க்கு 29 பைசா நிதியை ஒன்றிய அரசு கொடுத்தால் என்ன கொடுக்காவிட்டால் என்ன?. நம்பி வாக்களித்த மக்களை காப்பாற்றுவேன் என வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை முதல்வர் செயல்படுத்தி வருகிறார் என குளித்தலையில் நடைபெற்ற கண்டன பொதுக் கூட்டத்தில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசினார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட திமுக சார்பில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும், மறுசீரமைப்பு என்ற பெயரில் நாடாளுமன்ற தொகுதிகள் குறைப்பு, மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தித் திணிப்பு என, தமிழை அழிக்க நினைக்கும் ஒன்றிய மோடி அரசை கண்டித்து, குளித்தலை பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. தலைமைக் கழகப் பேச்சாளர் தமிழன் பிரசன்னா, கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைதுறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினர். அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேசியதாவது:-

நம்முடைய உரிமைகளை எல்லாம் விட்டுக் கொடுத்த நிலையில் ஆட்சிப்போறுப்பேற்ற நாள் முதல், தமிழ்நாட்டின் உரிமைகளை எல்லாம் மீட்டெடுக்கின்ற முதல்வராக நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தொகுதி மறுசீரமைப்பினால் ஏற்படுகின்ற பாதிப்பை மிகத் தெளிவாக பிரசன்னா அவர்கள் தோலுரித்துக் காட்டினார்.



அரசியல் கோமாளி

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த பாஜக மாநில தலைவர் ஒரு அரசியல் கோமாளி. காலையில் ஒரு பேச்சு, மதியம் ஒரு பேச்சு, மாலை ஒரு பேச்சு, இரவு ஒரு பேச்சு, விடிஞ்சா மறு பேச்சு. நேற்று என்ன பேசினோம் என்பது இன்று தெரியாது இன்று என்ன பேசினோம் என்பது நாளைக்கு தெரியாது. அவர் சொல்லுகிறார் இந்தியை பற்றி, மும்மொழி பற்றி. ஒன்றே ஒன்றை மட்டும் கேட்கிறேன். லண்டன் படிக்க போனப்ப ஹிந்தியில் பேசினாயா, இங்கிலீஷ்ல பேசினாயா?. இந்தியா இங்கிலீஷா அதை முதலில் நாட்டு மக்களுக்கு சொல்லி விட்டு அதற்கு அப்புறம் உம்முடைய மொழி கொள்கை பத்தி பேசு. மக்களிடம் சொல்வது ஒன்று. செய்வது மற்றொன்று என மக்களை ஏமாற்றுகிறார்கள்.

தவறான கருத்துக்களை கூறி நாட்டு மக்களின் வாக்குகளை பெற்று விட வேண்டும் என்று தவறான வழியில் செல்கின்ற கூட்டம் அந்த கூட்டம் . ஆனால் தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து நம்முடைய கழக தலைவர் முதல்வர் அவர்களுக்கு தொடர்வெற்றியினை வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த வெற்றியின் தொடர்ச்சி தான் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல். பாண்டிச்சேரியோடு சேர்த்து 40க்கு 40 என இமாலய வெற்றியை கொடுத்தார்கள். நம்முடைய மாவட்டத்தில் அருண் நேரு அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மகத்தான வெற்றியை உருவாக்கி தந்த குளித்தலை தொகுதி மக்களுக்கு எனது அன்பு கலந்த நன்றியை பாதம் தொட்டு தெரிவித்துக் கொள்கிறேன். மும்மொழி கொள்கையாக இருந்தாலும் தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் எண்ணிக்கையை குறைக்க கூடிய செயலாக இருந்தாலும் சரி, ஒட்டுமொத்த அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி ஒருமித்த கருத்தை முதலமைச்சர் உருவாக்கி இருக்கிறார்கள். இந்திய நாட்டிற்கு நெஞ்சுரத்தோடு முன்னெடுத்து செல்லக்கூடிய தலைவராக, நம்முடைய தலைவர் திகழ்கிறார்கள்.

நம்முடைய குளித்தலை அரசு மருத்துவமனைக்கு முதலமைச்சர் அவர்கள் 40 கோடி ரூபாய் நிதியை வழங்கியிருக்கிறார்கள் என்று எம்.எல்.ஏ கூறினார். வழங்கியது 50 கோடி அதில் 40 கோடியை குளித்தலை அரசு மருத்துவமனைக்கு வழங்கி விரைவில் அந்த பணிகள் நிறைவடைய இருக்கின்றன. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வென்ற முதல் தொகுதியான இந்த தொகுதிக்கும் மாவட்டம் முழுமைக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மகளிருக்கு மாதம் 1000 ரூபாய். அரசு பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணம், என கோடிக்கணக்கான தாய்மார்கள் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். புதுமைப்பெண், நான் முதல்வன், மக்களை தேடி மருத்துவம், காலை உணவு திட்டம் என வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். எல்லாவற்றிலும் குறை காணும் பாஜக நம்முடைய தலைவரின் திட்டத்தை மட்டும் காப்பியடித்து பிற மாநிலங்களில் வாக்குறுதியாக கொடுத்து வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை இந்தியா மட்டும் இன்றி உலகத்தில் பல நாடுகள் செயல்படுத்த கூடிய அளவுக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ரூபாய் வரியாக கொடுத்தால் 29 பைசாவைத்தான் திருப்பி தருகின்றது ஒன்றிய அரசு, இப்படிப்பட்ட நிதியை கொடுத்தால் என்ன கொடுக்காவிட்டால் என்ன. என்னை நம்பி வாக்களித்த மக்களை காப்பாற்ற நான் இருக்கிறேன். நிச்சயம் தமிழ்நாட்டு மக்களை காப்பாற்றுவேன் என்கிற உறுதியோடு சிறப்பு அரசு நலத்திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற நமது முதல்வர் அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் இவ்வாறு அவர் பேசினார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி தலைமை கழக பேச்சாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் தலைமையில் கூட்டத்தில் உறுதி மொழியேற்கப்பட்டது.

**தமிழன் பிரசன்னா பேசுகையில்...**

புதிய கல்வி கொள்கையை வெளியிட்டுள்ளதாக கூறும் பிஜேபி அரசு மறைமுகமாக விஸ்வகர்மா என்ற குலத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு கல்விக் கொள்கையை திணிக்கிறது. கல்வி நிதியாக அளிக்க வேண்டிய தொகையை, தமிழக மக்கள் ஒவ்வொருவரும் செலுத்திய வரிப்பணத்தை உரிமையுடன் திரும்ப கேட்கிறோம். ஆனால், உத்திரபிரதேச மாநிலத்திற்கு அதிக தொகையை அளிக்கப்படுகிறது, உங்களிடம் தமிழ்நாட்டின் உரிமையை தான் கேட்கிறோம், பிச்சை கேட்கவில்லை தொடர்ந்து தமிழ்நாட்டின் நலன்களை ஒன்றிய பாஜக அரசு புறக்கணிக்கும் பட்சத்தில் மீண்டும் பேரறிஞர் அண்ணா கூறியதைப் போல திராவிட நாடு கோரிக்கை விடும் நிலை உருவாகும் என அவர் கூறினார்.

பொதுக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, தலைமை கழக நிர்வாகிகள் கரூர் முரளி, முனவர் ஜான், கரூர் மாநகரச் செயலாளர் எஸ்பி. கனகராஜ், கரூர் மாநகராட்சி மேயர் மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வே. பல்லவி ராஜா, குளித்தலை சிவராமன், முன்னாள் எம்எல்ஏ இராமர், குளித்தலை நகர மன்ற தலைவர் சகுந்தலா பல்லவி ராஜா, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். முன்னதாக மாவட்ட துணைச் செயலாளர் பூவை ரமேஷ் பாபு வரவேற்புரையாற்ற, நிறைவில் மாவட்டத் துணைச் செயலாளர் மகேஸ்வரி சுப்பிரமணியன் நன்றி உரை கூறினார். ஆயிரக்கணக்கான ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் பல்லடம் ஒன்றியம், கணபதிபாளையம் முத்தமிழறிஞர் கலைஞர் திடலில் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான ‘தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!’ மாபெரும் கண்டன பொதுக்கூட்டம், மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், பல்லடம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நா.சோமசுந்தரம் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக மகளிர் அணி துணை செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன்.முத்துராமலிங்கம் ஆகியோர் உரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ் மொழி - இனம் பாதுகாக்க, துணிச்சலான முடிவுகளை மேற்கொள்ளும் தமிழ்நாடு முதல்வர், இந்த மொழிப் போர்க்களத்தில் வெற்றி பெறுவார் என்பதுமட்டும் உறுதி!

உலகமயமாக்கல் (Globalisation), தாராளமயமாக்கல் (Liberalisation), தனியார்மயமாக்கல் (Privatisation) ஆகிய இந்தக் கோட்பாட்டை கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொண்ட ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி, கூட்டுறவுக் கூட்டாச்சி முறையில் அமைந்துள்ள மாநிலங்களில் இந்தியை வெளிப்படையாகவும், திரைமறைவிலும் அரசாங்க மொழியாக (Official language) வலுக்கட்டாயமாக திணிப்பதற்கும், பேச்சுவழக்கில் நீர்த்துப்போன சமஸ்கிருத மொழியை சிறப்பு மொழியாக வளர்ப்பதற்கும் ஒன்றிய அரசுக்கு உள்நோக்கம் இருப்பதை யாராலும் மறுக்கவியலாது. இன்றைய அறிவியல் வளர்ச்சி என்பது மொழிகளின் தடையின்றி எந்த ஒரு நாட்டிற்கு பயணம் மேற்கொண்டாலும் பயணிக்கவிருக்கின்ற நாட்டு மக்கள் பேசும் மொழியினை நாமறிந்த மொழிக்கு மாற்றம் செய்து உடனடியாக கேட்டு அறிந்து கொள்வதற்கும், அதற்கான பதிலை நம் மொழியில் கூறினாலும் அதனை மொழிமாற்றம் செய்து கேட்பவர் மொழியில் பதில் வழங்குவதற்குமான அறிவியலின் புதியகண்டுபுடிப்புகளான நம்முடைய கைபேசி மூலமாகவே செய்து கொள்ளும் ஏற்பாட்டை அறிவுலகம் நமக்கு வழங்கியிருக்கிறது. செயற்கை நுண்ணறிவு கருவிகள் ஒவ்வொரு நாளும் ஆச்சரியப்படத்தக்க அறிவியல் அற்புதங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. உலக நாடுகள் முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய பல்வேறு இன மக்கள் பேசும் வேறுபட்ட மொழிகளை, தாங்கள் பேசும் மொழிக்கு மாற்றம் செய்து, செய்திகளை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பும், வசதியும் அறிவியல் உலகம் வழங்கியிருக்கின்ற இந்தக் காலச் சூழ்நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு, இந்த அறிவியல் உண்மைகளைப் புறந்தள்ளிவிட்டு இந்தி மொழியை நேரடியாகவும், மறைமுகமாகவும் திணிப்பதற்குக் காரணம், ஒரு பண்பாட்டு படையெடுப்பாகவே கருத முடிகிறது. பாரதிய ஜனதாக் கட்சி ஒன்றியத்தில் நரேந்திர மோடி தலைமையில் ஆட்சி அமைத்திருக்கிறது என்றாலும், இந்த அரசை சித்தாந்த அடிப்படையில் இயக்கிக் கொண்டிருப்பது இராஷ்டிரிய சுயம்சேவக் சங்(RSS) என்ற மதவாத அமைப்பாகும். இந்த மதவாத அமைப்பின் கோட்பாடு என்பது, வேதகால பண்பாட்டையும், சனாதன தர்மத்தையும், வர்ணாசர்மக் கோட்பாடுகளையும் மீண்டும் உயிர்ப்பித்து நிலை நாட்டுவதற்குதான் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இந்த மதவாத அமைப்பின் கோட்பாடுதான் “இந்துத்துவா” அடிப்படையிலான “இந்து ராஷ்டிரம்” என்ற “இந்து நாடு” என்பதாகும். இந்த சித்தாந்தக் கோட்பாட்டின் எதிரொலியாகத் தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு “ஒரே நாடு, ஒரே தேர்தல்” என்ற முழக்கத்தை மக்கள்முன் வைக்கிறது. இந்த மதவாத அடிப்படையிலான “இந்துராஷ்டிரத்தை” உருவாக்குவதற்கான வழிதடம் அமைக்கும் கருவியாக இந்தியை ஆட்சி மொழியாக்கும் முயற்சியில், எதார்த்தங்களைப் புறந்தள்ளிவிட்டு, அறிவியல் கண்டுபிடிப்புகளை நிராகரித்துவிட்டு, “இந்திதான்” ஆட்சிமொழி என்று பல்வேறு வழிகளிலும், வடிவங்களிலும் முயற்சிக்கிறார்கள். இந்த முயற்சி வெற்றி பெறப் போவதில்லை என்பதை காலம் அவர்களுக்கு உறுதியாக உணர்த்தும். திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் 05.05.1963ம் நாள் நாடாளுமன்ற மேலவையில் “இந்தி திணிப்பை எதிர்த்து” ஆங்கிலத்தில் உரையாற்றும் பொழுது “இந்தியா என்பது ஒரு நாடு அல்ல, பல்வேறு இனக் குழுக்களையும், பல்வேறு மொழி பேசுபவர்களையும் உள்ளடக்கிய ஒரு துணைக் கண்டம் என்பதனால்தான், ஒரு பொதுவான மொழியை அரசாங்க மொழியாக தேர்ந்தெடுக்க முடியாத நிலை உள்ளது” என்பதை தெளிவாக பதிவு செய்துள்ளார்கள். பேரறிஞர் அண்ணா தன்னுடைய உரையில் மேலும் குறிப்பிடுவது, “இந்திய ஆட்சி முறை என்பது கூட்டாட்சி முறைதான் (Federal state) ஒன்றிணைந்த ஆட்சி (Unitary state) முறையல்ல” என்றும் தெளிவுபடுத்துகிறார்கள்.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

(If India is a unitary State, this argument is logical. India is a federal State. Indian society is plural, our political system is composite and in a plural society and composite political system to plead for a single common language will, I think, create injustice unawares, create handicaps unawares to some section of the society. India is not a country. India consists of various ethnic groups, India consists of various language groups and India has been termed very correctly as a sub-continent and that is why we are not able to find out that common working medium as far as an official language is concerned.)

தாய்மொழி என்பது அந்த மொழி பேசும் மக்களின் விழிகள் போன்றது. அதுமட்டுமல்ல அந்த மொழி பேசும் மக்களின் அடையாளமாகவும், அந்த மக்களின் கலாச்சாரம், பண்பாடு, வாழ்வியல் முறைகளின் வெளிப்பாடாகவும் அமையும். எனவே, இந்திய ஒன்றிய அரசு அறிவித்திருக்கும் புதிய கல்விக் கொள்கை மூலம் மும்மொழி திட்டத்தின் வழித்தடத்தில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்திமொழி திணிக்கப்படுமேயானால், அந்தந்த மாநிலங்களில் உள்ள பள்ளிக் குழந்தைகள் மூன்று மொழியை கற்றுத் தீர வேண்டிய அவசியம் ஏற்படும். ஆனால், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட குழந்தைகள் இந்தியை மட்டும் படித்தாலே போதும். இந்த நிலைமை காலப் போக்கில் இந்தி பேசாத மாநிலங்களிலுள்ள மக்களை இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்கிவிடும். இந்த எதிர் விளைவுகளை எல்லாம் தொலைநோக்குடன் எண்ணிப் பார்த்துதான் 1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இரு மொழிக்கொள்கை தான் தமிழ்நாட்டின் தீர்க்கமான மொழிக் கொள்கை என தமிழ்நாடு சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் தன்னுடைய ‘ஐம்பெரும் முழக்கத்தில்’ “இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம்” என்றார். தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியின் வழிகாட்டியும், மாண்புமிகு முதல்வருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டானின் அவர்கள் இந்தி மொழித் திணிப்பை ஒன்றிய அரசின் மும்மொழி திட்டத்தின் மூலம் திணிக்கப்படுமானால், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் “இந்தி மொழித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம் தமிழ் நாட்டில் தொய்வின்றித் தொடரும்” என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆம்! பேரறிஞர் அண்ணா அவர்கள் 05.05.1963ம் ஆண்டு இந்தி மொழி திணிப்பைப் பற்றி உரையாற்றிய பொழுது, இந்தி மொழி ஒன்றிய அரசினுடைய அரசாங்க மொழியாக திணிக்கப்படுமேயானால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தமிழ்நாட்டில் தொய்வில்லாதத் தொடர் போராட்டம், விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் தொடரும் என்று எச்சரித்தார்கள். (If Hindi is imposed as the official language, the DMK will unfold its relentless fight, its relentless agitation against this imposition of Hindi whatever be the consequences.)

இன்றைய விஞ்ஞான உலகம் வழங்கியிருக்கின்ற அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தி இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 22 மொழிகளையும் இந்திய ஒன்றியத்தினுடைய அரசாங்க மொழியாக தாராளமாக ஆக்கலாம். வெவ்வேறு தாய்மொழியை அடையாளமாகவும், ஊடகமாகவும் கொண்ட இனக்குழுக்கள் தங்களுடைய மொழிக்கோ, பண்பாட்டிற்கோ, வாழ்வியல் நெறிகளுக்கோ எவ்வித இழப்பும் இன்றி செயல்படுவதற்கும், இந்தியக் கூட்டுறவுக் கூட்டாட்சியை வலுப்படுத்துவதற்கும், ஏற்ற நடைமுறையாக அமையும். இந்தக் கருத்தைத் தான் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதல்வர் சமீபத்திலே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதல்வருடைய இந்தக் கருத்துக்கு இந்தி பேசாத மாநிலங்களின் மக்களும், அரசும் ஆதரிக்கின்ற சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. எந்த ஒரு மாநிலத்திலும் அந்த மாநில மக்களின் தேவைக்கேற்ப, இந்திய ஒன்றியம் மட்டுமல்ல, உலகம் முழுமையும் உள்ள மொழிகளில் ஏதாவது ஒரு மொழியை அவர்கள் கற்றுக் கொள்ளலாம். அதன் மூலம் அவர்களது வேலை வாய்ப்பைப் பரவலாக்கி கொள்ளலாம், வணிகத் தொடர்புகளையும் உருவாக்கிக் கொள்ளலாம். எனவே, அந்தந்த மாநில மொழிகள் அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டபடி 22 மொழிகளும் ஒன்றியத்தின் ஆட்சி மொழிகளாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் வணிக நிமிர்த்தமாகவும், வேலை வாய்ப்பு நிமிர்த்தமாகவும் அல்லது வேறு பல காரணங்களின்அடிப்படையில்எந்தமொழிஅவசியமோ அல்லது தேவையோ அந்த மொழியைத் தங்களது விருப்பப்படி கற்றுக் கொள்ளலாம். இந்த ஏற்பாட்டின் மூலம் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையுள்ள பல்வேறு மொழிகள் பேசக்கூடிய மக்களுக்கு சாதக பாதகங்கள் ஒரே சீராகவும், சமமாகவும் இருக்கும். மாறாக, இந்தி மட்டும் ஆட்சி மொழியாக, மும்மொழி திட்டத்தின் மூலம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ திணிக்கப்படு மேயானால், காலப்போக்கில் இந்திபேசும்மாநிலத்தில்உள்ளமக்கள்முன்னுரிமை பெற்றவர்களாகவும், இந்தி பேசாத மாநிலத்தில் உள்ள மக்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகவும் ஆக்கப்படுவார்கள் என்பதில் மாற்றமில்லை. எனவேதான், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல்வர் ஆட்சிக் காலத்தில் தமிழர்களின் தொன்மையான நாகரீகத்தின் சுவடுகளையும், நகர்நாகரீகத்தின் சான்றுகளையும் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் இரும்பின் பயன்பாட்டையும் அறிந்து, இரும்பை பிரித்தெடுக்கும் அறிவியல் நுட்பத்தை பெற்றிருந்தார்கள் என்பதை அறிவியல் அடிப்படையில் நிரூபித்து காட்டியுள்ளார்கள். இப்படி தமிழர்களின் தொன்மையான பண்பாட்டின் அடையாளங்களை வெளிக் கொண்டுவரும் மாண்புமிகு தமிழ்நாட்டு முதல்வர் அவர்களின் இந்த மொழிப் போராட்டத்திற்கு அகில இந்திய அளவில், இந்தி பேசாத மாநில அரசுகளும், மக்களும் ஒன்றிணைந்து போராடுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை செய்தி ஊடகங்கள் மூலம் அறிய முடிகிறது. சற்றேறக் குறைய 100 ஆண்டுகால மொழிப் போராட்ட வரலாற்றில், இன்றைய தமிழ்நாட்டின் மாண்புமிகு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் “தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெற்றி பெறும்”, அன்னைத் தமிழ் தங்குதடையின்றி ஆட்சி பீடத்தில் அமரும். அதற்கான போர்க்களத்தை எதிர்கொள்ள மாண்புமிகு முதல்வரின் கட்டளையினை ஏற்று ஆர்ப்பரிக்கும் அரிமாக்களென அணி திரள்வோம், வாரீர்.